In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

S.C.No.157/2021 | Prosecution witness P.W.8

Name: Lakshmi | Calling:

Father Name: | Religion:

Village: | Caste:

Taluk: | Age:

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 19-11-2024.

**(Accused are present.)**

முதல் விசாரணை :-

நான் தற்போது திண்டுக்கல் என்.எஸ்.நகரில் குடியிருந்து வருகிறேன். அசா7 எனது கணவர். அவர் டீக்கடை வைத்து நடத்தி வருகிறார். சம்பவத்தில் இறந்துபோன சிவக்குமார் எனது மகன். எனது மகன் சிவக்குமாரும் அசா2 ஹரிஹரனும் நண்பர்கள். வீட்டுக்கு வரப்போக இருப்பார்கள். செல்கடையில் இரண்டு பேரும் வேலை பார்த்து வந்தார்கள். 10.01.2019 ம் தேதி இரவு 10.30 மணியளவில் அசா1 சந்தானம் வந்து சம்பவம் நடந்ததாகவும் எனது மகனை குத்தியதாகவும் அவர் இறந்துவிட்டதாகவும் சொன்னார். அன்றைய தினம் காலையில் எனது மகன் அசா1 வீட்டிற்கு போயிருந்தான். தகவல் அறிந்து நாங்கள் உடனே திண்டுக்கல் அரசு மருத்துவமனை சென்றோம். அங்கு வந்த அசா1, 2 இடம் என்ன நடந்தது என்று கேட்டோம். நவரத்தினக்கல் வாங்குவது சம்மந்தமாக அசா1 சந்தான கிருஷ்ணன், அவரது மகன் அசா2 ஹரிஹரன், எனது மகன் சிவக்குமார் ஆகியோர்கள் மாமரத்துப்பட்டிக்கு போனதாகவும் அட்வான்ஸ் ரூ.50000 ம் கொடுத்திருந்ததாகவும், பார்ட்னராக இருக்கிறீர்களா என கருஞ்சாமி கேட்டதாகவும், அதற்கு இடையில் இருதரப்புக்கும் பிரச்சனை ஆகிவிட்டதாகவும், திரும்ப ரூ.1,00,000/- கொண்டுவந்தால் நல்ல கல்லை கொடுப்பதாகவும், அவ்வாறு கொடுத்தது பாசியாக மாறிவிட்டதாகவும், ரூ.1,50,000/- லட்ச ரூபாய் மேலும் கொடுத்தால் நல்ல நவரத்தினக்கல்லை கொடுப்பதாக முருகன் என்ற கருஞ்சாமி சொன்னதாகவும், அதில் இரண்டு பேருக்கும் பிரச்சனையாகி சண்டை வந்துவிட்டது என்றும் அந்த

பிரச்சனையில் கருஞ்சாமி என்ற முருகன் என் மகன் சிவக்குமாரை கத்தியால் வலது பக்க முதுகில் குத்திவிட்டதாகவும் என் மகனை திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு கொண்டுவந்து விட்டதாகவும் எங்களிடம் தகவல் சொன்னார். அசா1 சந்தானம் வடமதுரை காவல் நிலையத்தில் புகார் கொடுக்கச் செல்வதாகச் சொல்லி சென்றார். என் மகன் இறந்து விட்டதாகச் சொல்லி உள்ளே வைத்திருந்தார்கள். அன்றைய தினம் இரவு என் மகனை பார்க்கவில்லை. மறுநாள் காலை பார்த்தோம். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :–

மேற்சொன்ன சங்கதிகள் அனைத்தும் அசா1 சந்தானம் சொல்லித்தான் எனக்குத் தெரியும் என்றால் சரிதான். என் மகன் அன்றைய தினம் எனது வீட்டிலிருந்து காலை 10 மணிக்கு வீட்டை விட்டு கிளம்பினார்.

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2024.11.19 17:57:12 +0530

Principal District Judge,
Dindigul.